# மிருகத்தின் முத்திரை

## Dr . P V Jesudas

**ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை; நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்கவந்தேன். என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்.**

- யோவான் 12: 47, 48.

**க**டைசிக்காலத்தில் நாம் இருப்பதால் அவர் சொன்ன வசனங்களையும் கட்டளைகளையும் நாம் கொஞ்சமும் அசட்டை பண்ணாமல் பயபக்தியாக கடைப்பிடிக்கவேண்டியது நமது கடமையாகும். ஆண்டவர் தமக்கென்று ஒரு முத்திரையை வைத்திருக்கின்றார். அந்த முத்திரைக்கு விரோதமான இன்னொரு முத்திரையும் இந்த உலகத்தில் இருக்கிறது. இந்த முத்திரையின் தீர்க்கதரிசனக்காலத்தில்தான் நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக் கிறோம் . அடுத்து வரப்போகும் முத்திரையின் சம்பவம்தான் மிக சீக்கிரத்தில் இந்த உலகத்தில் நடக்கவிருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் வரப்போகும் அந்த நேரத்தை மிக சரியாக புரிந்து கொள்வார்கள், எப்படியென்றால் அவர்களுக்கு தேவனே வெளிப் படுத்துவார்.

**அப்பொழுது நீ பார்வோனோடே சொல்லவேண்டியது என்னவென்றால்: இஸ்ரவேல் என்னுடைய குமாரன், என் சேஷ்டபுத்திரன். எனக்கு ஆராதனை செய்யும்படி என் குமாரனை அனுப்பிவிடு என்று கட்டளையிடுகிறேன்; அவனை விடமாட்டேன் என்பாயாகில் நான் உன்னுடைய குமாரனை, உன் சேஷ்ட புத்திரனைச் சங்கரிப்பேன் என்று கர்த்தர் சொன்னார் என்று சொல் என்றார்.** யாத் 4. 22, 23 **நீங்கள் இஸ்ரவேல் சபையார் யாவரையும் நோக்கி: இந்த மாதம் பத்தாம் தேதியில் வீட்டுத் தலைவர்கள், வீட்டுக்கு ஒரு ஆட்டுக்குட்டியாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துகொள்ளக்கடவர்கள்.** - யாத். 12: 3.



**அதின் இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து, தாங்கள் அதைப் புசிக்கும் வீட்டுவாசல் நிலைக்கால்கள் இரண்டிலும் நிலையின் மேற்சட்டத்திலும் தெளித்து,** யாத். 12: 7.

**நீங்கள் இருக்கும் வீடுகளில் அந்த இரத்தம் உங்களுக்காக அடையாளமாய் இருக்கும்; அந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்; நான் எகிப்துதேசத்தை அழிக்கும்போது, அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும்.** -யாத். 12: 13.

இந்த வசனங்களில் ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு அடையாளத்தை சொல்லுகிறார். தேவனுடைய பிள்ளைகள் என்ற அடையாளத்திற்காக ஆட்டுகுட்டியின் இரத்தத்தை எடுத்து வீட்டுவாசல் நிலைக்கால்களிலும் அதின் நிலையின் மேற்சட்டத் திலும் தெளிக்கசொன்னார் . அவர் வீடுகளை கடந்துபோகும்போது தெளித்த அந்த இரத்தத்தைக் கண்டு அவர்களை அழிக்காமல் அவரை எதிர்த்து நின்ற எகிப்தியர்களை வாதைகளினால் அழித்தார். ஆகவே அன்று அவர்களுக்கு ஒரு அடையாளத்தை கொடுத்ததுபோல, இன்று இந்த கடைசி நாட்களிலே தேவனுடைய பிள்ளைகளுக்கு ஒரு அடையாளம் கொடுக்கப்படுகிறது.

**உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது. உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக்காண்பாய். எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத்தாபரமாகக் கொண்டாய். ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது. உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.**

**சங்கீதம்** 91. 7, 8, 9, 10, 11.

அழிவு இந்த உலகத்தில் வரபோகிறதென்று கர்த்தர் நமக்கு மிக விளக்கமாக தமது வேத வசனத்தில் சொல்லியிருக்கிறார். கர்த்தரை விசுவாசிக்கும் ஒவ்வொரு தேவப்பிள்ளைகளையும் அந்த அழிவு ஒன்றும் செய்யபோவதில்லை.

**கர்த்தர் அவனை நோக்கி: நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு என்றார்.** -எசே 9: 4.

இங்கு எருசலேம் என்பது உவமையாக பேசப்படுகிறது. நீ உலகம் எங்கும் போய் தேவனுடைய பிள்ளைகளின் நெற்றிகளில் ஒரு அடையாளத்தைப்போடு என்று சொல்லுகிறார். இந்த அடையாளத்தை குறித்து தீர்க்கமாக ஆண்டவர் வேறு இடத்தில் சொல்லுகிறார்.

**இவைகளுக்குப்பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருக்கக்கண்டேன். ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலை யுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக் கண்டேன்; அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம்பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.**
-வெளி 7: 1, 2, 3.

இங்கு ஆண்டவர் தம்முடைய ஊழியக்காரர்கள் முத்திரை போட்டு தீருமளவும் அந்த நான்கு காற்றுகளை (யுத்தங்களை) பிடித்து வைத்திருக்கின்றார். அப்படி யுத்தம் வந்தால் எல்லா மனிதர்களும் அழிந்துவிடுவார்கள். ஏனென்றால் எல்லா நாடுகளும் அணு ஆயுதங்களை வைத்திருக்கின்றனர். இந்த தீர்க்கதரிசனத்திலே அந்த தீர்க்கதரிசி இனி நடக்கபோகிற எல்லா காரியங்களையும் பார்க்கிறார்.

**பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன். - வெளி. 14: 1.**

இங்கு பிதாவின் நாமம் என்றால் தேவனுடைய முத்திரை என்று அர்த்தம். இப்படி ஆண்டவர் தம்முடைய முத்திரையை தமது பிள்ளைகளின் நெற்றியில் போட்டுகொண்டிருக்கும்போது திருமறை மற்ற இடத்திலே மிருகத்தின் முத்திரையை குறித்து பேசுகிறது.

**அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கும் செய்தது. இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு. -வெளி. 13: 17, 18.**

**அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ,அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூ தர்களுக்குமுன்பாகவும்ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும்அக்கினியினாலும்**



**கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.**
-வெளி 14: 9, 10, 11.

## இந்த மிருகம் என்றால் என்ன?

**அவன் சொன்னது: நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாம்; அது எல்லா ராஜ்யங்களைப்பார்க்கிலும் வேறாயிருந்து, பூமியை எல்லாம் பட்சித்து, அதை மிதித்து, அதை நொறுக்கிப்போடும்.**
-தானியேல் 7: 23.
**பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.**
-வெளி. 13: 1.

## இந்த கடல் என்றால் என்ன ?

**பின்னும் அவன் என்னை நோக்கி: அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே; அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம். -வெளி. 17: 15.**

அப்படியானால் கடற்கரை மத்தியிலே மிருகம் வந்தது என்றால் ராஜியம் வந்தது என்று அர்த்தம். அந்த ராஜியத்திற்கு ஏழு தலைகளும் பத்து



கொம்புகளும் இருந்தது. அந்த பத்து கொம்புகளை பற்றி தானியேல் ஏழாம் அதிகாரத்திலே சொல்லப்படுகிறது.

தலைகள் என்று சொல்லப்படும்போது அரசாளுகின்ற ராஜியங்கள் என்று அர்த்தப்படுத்துகின்றது. பத்து கொம்புகள் என்றால் பத்து ராஜியங்களை குறிக்கிறது. அந்த ஏழு தலைகள் என்றால் எகிப்து, அசிரியா, பாபிலோன், கிரேக், ரோம் (1. அஞ்ஞான ரோம் 2. பாப்பு அரசு ரோம்). இந்த ஏழு தலைகளுக்கும் வல்லமை வலுசர்ப் பத்திலிருந்து வந்தது.

**நான் கண்ட மிருகம் சிறுத்தையைப்போலிருந்தது; அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன; வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.** -வெளி. 13: 4.

## வலுசர்ப்பத்தை பற்றி வேதம் என்ன சொல்லுகிறது?

**உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.** -வெளி. 12: 9.

வலுசர்ப்பமான பிசாசு தன்னுடைய மிகுந்த அதிகாரத்தையும் பலத்தையும் சிங்காசனத்தையும் இந்த 7 நாடுகளுக்கு கொடுத்தது. அதில் இப்பொழுதிருக்கிற பாப்பு அரசுக்கும் கொடுத்து கெண்டிருக்கிறது. இன்று கத்தோலிக்கத் திருசபையைபோல வல்லமையுள்ள திருசபை கிடையாது. அமெரிக்கா ஐரோப்பா நாடுகளும் இந்த போப்பு அரசு சொல்லுவதைதான் கேட்கிறார்கள். ஆகவே இவர்களுக்கெல்லாம் வல்லமை அந்த வலுசர்ப்பத்தினின்று வருகிறது. அக்காலத்திலே ரோம அரசர்கள் அஞ்ஞானமார்க்கத்தை கடைபிடித்ததினால் கிறிஸ்தவர்களை சித்திரவதை செய்து 5 லட்சபேர்களை கொன்றார்கள். ஆனால் மூன்றாவது நூற்றாண்டிலே கான்ஸ்டன்டைன் என்ற ரோம அரசன்



**கான்ஸ்டன்டைன்**



கிறிஸ்தவ மார்க்கத்தில் தழுவினார். அப்படி வந்தபோது ரோம நாடு கிறிஸ்தவநாடாக மாறியது. இதனால் ரோமநாட்டை இரண்டாக பிரித்து, ஒன்று அஞ்ஞான ரோம், இன்னொன்று பாப்பரசுரோம் என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. கொனசந்திராயன் தன்னுடைய தலைநகரை ரோமாபுரியிலிருந்து கான்ஸ்டாட்டின் நோபல் என்ற இடத்திற்கு மாற்றிக் கொண்டுபோனான்.

ரோமாபுரியிலிருந்த பிஷப், ஒரு அரச அதிகாரம் பெற்றவராக எல்லா பிஷப்புகளுக்கும் மேலாக மாறி பாப்புஅரசர் என்ற பெயரை அவர் வைத்துக்கொண்டார். ரோம அரசு தன்னுடைய வல்லமைகளையும் இந்த பாப்பு அரசுக்கு கொடுத்தது. ஆகவே அன்றிலிருந்து அந்த ரோமாபுரியில் ஆண்டு வருகிற அந்த பாப்பு அரசர்கள் அத்தனை வல்லமைகளையும் சிங்காசனத் தையும் அவர்கள் கெட்டியாக பிடித்துக்கொண்டார்கள்.

வேதாகமமும் அதைதான் திட்டவட்டமாக சொல்லுகிறது. நம்முடைய பரிசுத்த வேதபுத்தகம் அந்த கத்தோலிக்க மார்க்கத் திலிருந்துதான் வந்தது. விக்கிரகத்தை வைத்திருக்கிற அந்த ரோமன் கத்தோலிக்க சபைகள் இந்த வேதபுத்தகத்திலுள்ள விக்கிரக ஆராதனை செய்யாதிருப்பாயாக என்ற கட்டளையை அப்படியே அவர்கள் எடுத்திருக்கலாம். ஆனால் தங்களுடைய குறிப்பிடத்தில் எடுத்துவிட்டார்கள், மற்றும் வேதபுத்தகத்திலே ஆண்டவர் அந்த கட்டளையை எடுக்கவிடவில்லை. இப்பொழுது அவர்கள் கைகொள்ளுகிற ஏராளமான காரியங்களை வேதபுத்தகத்திலே புகுத்தியிருக்கலாம். ஆனால் ஆண்டவர் அதை அனுமதிக்க வில்லை.

இது ஒரு பெரிய ஆச்சரியம். கர்த்தர் எவ்வளவு பத்திரமாய் ஆண்டாண்டுக் காலமாக நம்முடைய வேதபுத்தகத்தை காத்து வருகிறார். நம்முடைய வேதபுத்தகம் ரோமன் கத்தோலிக்கர்களின் கையிலே 1260 வருஷமிருந்தது. எதை வேண்டுமானாலும் அவர்கள் செய்திருக்கலாம். அங்கு ஆண்டவர் அதை பாதுகாத்து நம்முடைய கையிலே அப்படியே கொடுத்திருக்கிறார்.

ஆகவே இந்த ரோமன் கத்தோலிக்க திருசபைக்கு அதிகாரம் எல்லாம் வலுசர்பத்திலிருந்து வந்தது. அஞ்ஞான மார்க்கத்தின் கொள்கைகள் அத்தனையும் இந்த ரோமன் கத்தோலிக்கமார்க்கம் எடுத்துக்கொண்டது. அஞ்ஞான மார்க்கத் திலே உத்திராட்சை மாலை என்றால் கத்தோலிக்க மார்க்கத்தில் ஜெபமாலை என்று இருக்கிறது.

அஞ்ஞான மார்க்கத்திலே சந்நியாசிகள் என்றால் கத்தோலிக்க மார்க்கத்திலும் ஃபாதர்கள் என்று இருக்கிறது. அஞ்ஞான மார்க்கத்திலே தேவ அடியார்கள் என்ற ஒரு கூட்டம் இருந்தது கத்தோலிக்க மார்க்கத்திலும் ஓசியார்கள் பணிவிடைக்காரர்கள் என்று இருக்கிறது. அஞ்ஞான மார்க்கத்திலே சிலை வணக்கம் என்றால் கத்தோலிக்க மார்க்கத்திலும் சிலை வணக்கம் என்று இருக்கிறது. அஞ்ஞான மார்க்கத்திலே தேர் இழுப்பது என்றால் கத்தோலிக்க மார்க்கத்திலும் மாதா தேர் இழுக்கிறார்கள் என்று இருக்கிறது. அஞ்ஞான மார்க்கத்திலே பூஜைகள் என்றால் கத்தோலிக்க மார்க்கத்திலும் பூசைகள் என்று இருக்கிறது. இப்படியாக வலுசர்ப்பமானது தன்னுடைய வல்லமையும் சிங்காசனத்தையும் அந்த மிருகத்திற்கு கொடுத்தது என்று வேதம் சொல்லுகிறது.

இன்றைக்கு நாம் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு மற்ற வேத மார்க்கத்தினரின் கொள்கைகளை ஆசரிக்கும்போது நாம் நம்மை உண்மையான கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளமுடியுமா? அல்லது நாம் உண்மையாக யாரை வணங்கு கிறோம் என்பது நமக்கு புரிகிறதா?

**வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது.** என்று வேதம் திட்டவட்டமாக சொல்லுகிறது. ஆகவே அந்த வலுசர்ப்பத்தை குறித்து நாம் இன்னமும் ஒன்றும் அறியாமலேயே வணங்கிக் கொண்டிருக் கிறோம்.

**அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி,**
-வெளி. 13: 3.

1792–ம் ஆண்டிலே பிரான்ஸ் நாட்டிலே புரட்சி வந்தது. அந்த புரட்சியின்போது ஜெனரல் பெல்தியேர் என்று சொல்லப் பட்டவர் இத்தாலிக்கு வந்து வாடிகன் அரன்மனையிலே புகுந்து பாப்பு அரசரை சிறைபிடித்து மிலான் என்ற நகரத்திலே வைத்து விட்டார். அவர் 18 வருடங்கள் சிறைச்சாலையிலே இருந்து உயிரிழந்துபோனார். அப்பொழுது ரோமன் கத்தோலிக்க மார்க்கமே இல்லாமல் போய்விட்டது. ஆனாலும் 1870–ம் ஆண்டு பாப்பு அரசரை திரும்பவும் சிறைச்சாலையில் அடைத்துவிட்டார்கள். அதிலிருந்து 1929 ஆண்டு வரைக்கும் பாப்பு அரசரே இல்லாமல் போய்விட்டார்கள்.



இதைதான் வேதம் சொல்லுகிறது,
**அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்;**

-1929 ம் ஆண்டில் செயின்ட் ஜான் லேட்ரான் என்று சொல்லப்பட்ட அந்த இடத்திலே, கார்டினல் கேஸ்பரி என்று சொல்லப்பட்டவர், அந்த இத்தாலியை ஆண்ட முஸலோனி என்பவரை பார்த்து அநேக நாட்கள் அவரிடம் பேசி, அந்த ராஜாங்கத்திற்கும் கத்தோலிக்க திருசபைக்கும் இருந்த சண்டைகளை சமாதானப்படுத்தினார். அப்பொழுது அந்த முஸலோனி திரும்பவும் பாப்பு அரசரை உயர்த்தி அந்த வேடிகன் சிட்டியை அவருக்கு திரும்பவும் கொடுத்தார்.



வாடிகன்

**ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது.** என்று வேதம் திட்டவட்டமாக சொல்லிவிட்டது. அதற்கு பிறகு
**பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங் கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்.** -வெளி. 13: 3, 4.

மறுபடியுமாக அந்த மிருகத்தை உலகம் முழவதும் ஆச்சரியமாக பின்பற்றுகிறது. இன்று புராட்டஸ்டன்ட் மார்க்கத்தினரும் அந்த மிருகத்தை குறித்து ஆச்சரியப்பட்டு கொண்டிருக்கிறார்கள். முன்பு இந்த கத்தோலிக்க மார்க்கத்தினர் புராட்டஸ்டன்டக்காரர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று சொன்னார்கள். ஆனால் போப்பு ஜான் 23,



**ஜான் 23**

இவர்கள் சிதறடிக்கப்பட்ட ஆடுகள் கத்தோலிக்க மார்க்கத்தினரோடு வந்துவிடுங்கள் நாங்கள் உங்களை சேர்த்து கொள்கிறோம் என்று சொன்னார். மிக சீக்கிரத்தில் அவர்கள் இருவரும் இணைந்துவிடுவார்கள் என்று வெளிப்படையாகவே தெரியும்.

**பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.** -வெளி. 13: 5.

இந்த நாற்பத்திரண்டு மாதத்தை குறித்து தானியேல் என்ன சொல்லுகிறார்?

**உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்.** -தானியேல் 7: 25.

இந்த காலங்களை குறிக்கும்பொழுது மூன்றரை வருஷம் என்று கணக்காகிறது. இந்த மூன்றரை வருஷத்தில் நாற்பத்திரண்டு மாதங்கள் இருக்கிறது. 538–லிருந்து 1792 வரைக்கும் அதனுடைய அதிகாரம் இருந்தது அதற்கு பிறகு அது மரணக்காயத்தை அடைந்துகொண்டது. இந்த விளக்கங்கள் யாவும் அந்த மிருகம் யார் என்று சுட்டிகாட்டுகிறது.



**இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு.**
-வெளி. 13: 18.

ரோமன் கத்தோலிக்க பாப்பு அரசருக்கு பெயர் **VICARIUS FILII DEI** அதற்கு அர்த்தம் கிறிஸ்துவினுடைய பிரதிநிதி. பாப்பு தனது சிங்காசனத்தில் உட்காரும்போது ஒரு கிரீடம் சூட்டப்படும்.








அந்த கிரீடத்திலே லத்தீன் பாஷையிலே **VICARIUS FILII DEI** என்று எழுதப்பட்டிருக்கிறது.

**அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.** வெளி. 14: 11.

அதினுடைய நாமம் என்பதுதான் அந்த மேலே கொடுக்கப்பட்ட வார்த்தைகள்.

அந்த நாமத்திற்கு கணக்கு இருக்கிறது. **V=5, I=1, C=100, A R** -க்கும் கணக்கு கிடையாது. **U=5 , S,F** -க்கும் கணக்கு கிடையாது. **L=50 , D=500. E** -க்கு கணக்கு கிடையாது. ஆகவே அந்த வார்த்தைகளுக்கு இந்த கணக்கு போட்டு பார்த்தோமென்றால் சரியாக 666 நம்பர் வருகிறது. ஹிட்லருக்கும் இந்த 666 தான் வருகிறது ஆனால் நம்பர் மாத்திரமே வரும், மற்றும் வேதம் சொல்லுகிறபடி மிருகத்தினுடைய அடையாளங்கள் பல கொடுக்கப்பட்டிருக்கிறது. அது பாப்பு அரசரை தவிர வேறு யாரையும் அடையாளம் காட்டவில்லை.

## ஆண்டவருடைய முத்திரை என்ன?

**சாட்சி ஆகமத்தைக் கட்டி, என் சீஷருக்குள்ளே வேதத்தை முத்திரையிடு என்றார்.** -ஏசாயா 8:16. **வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.** -ஏசாயா 8.20.

வேதத்திற்கு உண்மையான பெயர்தான் சாட்சியாகமம். யாராகிலும் அற்புதங்களும் அடையாளங்களும் செய்தால் நம்முடைய வேதத்திலுள்ளவைகளை ஒப்பிட்டுப் பார்த்து சரியானதா என்று ஆராயவேண்டும்.

ஏதாகிலும் ஒரு புதிய சட்டம் வெளியானால் அந்த சட்டத்திற்கு கீழ் முத்திரையும் கையெழுத்தும் போடப்பட்டிருக்கும் அப்பொழுதுதான் அந்த சட்டம் செல்லும். அவ்வண்ணமாகவே இங்கு கர்த்தர் வேதத்தை முத்திரைப் போடு என்று சொல்லுகிறார். அப்படியானால் முத்திரை அந்த வேதத்தில் இருக்கிறது. வேதம் என்றால் பத்து கற்பனைகளும் அவருடைய வசனங்களும். ஆகவே ஆண்டவர் கொடுத்த சட்டமாகிய அந்த பத்து கற்பனைகளில் முத்திரை போட்டிருக்கிறார். அந்த சட்டத்தை ஒரு மனிதனும் மாற்றமுடியாது.

பாப்பு அரசர் சில மாற்றங்களை செய்தாலும் அது கத்தோலிக்கர்களுக்குதான் செல்லுமே தவிர மற்றவர்களுக்கு கிடையாது. ஆகவே ஆண்டவர் பத்து கற்பனைகளில் நான்காவது கற்பனையை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக என்று சொல்லுகிறார்.

**ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும்,**



**உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக் காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.** -யாத். 20:8, 9, 10, 11.

இங்கு **தேவனாகிய கர்த்தருடைய** பெயர் இருக்கிறது மற்றும் அவருடைய வேலையை குறித்து காட்டுகிறது **அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி,** அதாவது சிருஷ்டி கர்த்தா என்று காட்டுகிறது. எதை படைத்தார்? **வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும்அவைகளிலுள்ள எல்லாவற்றையும்** அப்படியானால் பரிசுத்த கற்பனைகளுள்ள இந்த வேதத்தை முத்திரை போடு என்று சொன்னாரே அந்த முத்திரை இந்த நான்காவது கற்பனைகளில் இருக்கிறது.அந்த பத்து கற்பனைகளில் நான்காவது கற்பனையை மாத்திரம் நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். **எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.** தேவனாகிய கர்த்தர் அந்த நாளை பரிசுத்தப்படுத்தினதால் **ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக;** என்று சொல்லுகிறார்.ஆகவே கடவுளுடைய முத்திரையை இந்த நான்காவது கற்பனையில் வைத்திருக்கிறார்.

**என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தமாக்குங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும் என்றேன்.**-எசேக்கியேல் 20:20.

**நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்கு, கட்டளையிட்டேன்.** -எசேக்கியேல் 20.12.

**நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்க வேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்.** -யாத். 31:13.

**அது என்றைக்கும் எனக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் அடையாளமாயிருக்கும்; ஆறுநாளைக்குள்ளே கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்து பூரித்தார் என்றார்.** -யாத். 31:17.

இங்கு கர்த்தர் ஓய்வு நாள் எனக்கும் உங்களுக்கும் அடையாளம் என்று பல முறை சொல்லுகிறார்.

அடையாளம் என்றால் முத்திரை என்றும் அர்த்தமாகிறது. ஆகவே ஏழாம்நாள் ஆசரிப்பு கடவுளுடைய முத்திரை என்று பரிசுத்தவேதம் மிக திட்டத்தெளிவாக சொல்லுகிறது. கர்த்தருடைய பிள்ளைகள் அந்த பரிசுத்த ஏழாம்நாளை ஆசரிக்கும்போது தேவனுடைய முத்திரையை பெற்றவர்கள் என்று அர்த்தமாகிறது. அநேக நூற்றாண்டுகளாக மறைந்திருந்த இந்த சத்தியம் இந்த கடைசிக் காலத்திலே மறுபடியுமாக துளிர்விட்டு எழுந்து மக்கள் மத்தியிலே திரளாக வைக்கப்படும்.

தேவனுடைய பிள்ளைகளின் நெற்றிகளில் தேவ முத்திரை போட்டு தீருமளவும் அந்த நான்கு தூதர்கள் நான்கு காற்றுகளை பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அது இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கடைசிநாளிலே அந்த முத்திரை யினுடைய விசேஷமான செய்திகளை உலகமெங்குமுள்ள எல்லா மக்களுக்கும் சேர்ந்துக்கொண்டிருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளு கிறவர்களுக்கு தேவன் அந்த முத்திரையை தரிக்கிறார்.

ஆகவே ஆண்டவருடைய முத்திரை என்பது அந்த பரிசுத்த ஓய்வு நாள் ஆசரிப்பேயாகும். கடைசி நாட்களிலே மிக பிரமாண்டமான அழிவுகள் வருவதற்கு முன்பாக ஆண்டவர் தமது பிள்ளைகளின் நெற்றிகளில் முத்திரை போட்டு அவர்களை அந்த அழிவுகளுக்குதப்புவிப்பார். அவர்கள் வரபோகிற வாதைகளில் தப்பித்துக்கொள்வார்கள்.

ஆண்டவருடைய முத்திரைக்கு எதிராக இருக்கும் போலி முத்திரை தான் கத்தோலிக்க ஞாயிறு ஆசரிப்பு.அது தான் மிருகத்தினுடைய முத்திரையாக இருக்கிறது.கார்டினல் கிப்பன்ஸ் என்பவர் ஒரு புத்தகத்தில் ஆண்டவருடைய கட்டளையை மாற்றியதால் ஞாயிறு ஆசரிப்புதான் ரோமன் கத்தோலிக்க திருசபையினுடைய அதிகாரத்தின் முத்திரை என்று சொல்லுகிறார். ஆகவே வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக் கிழமையை அவர்கள் முக்கியப்படுத்தி அதில் உலகமே ஓய்ந்திருக்க செய்துவிட்டார்கள். இங்கு காலகாலமாக கடைபிடிக்கப்பட்ட ஓய்வுநாளான சனிகிழமை சுத்தமாக மறைக்கப்பட்டு அந்த ஞாயிற்றுகிழமையே முழு ஓய்வுநாளாக மாறிவிட்டது. அது மிக சீக்கிரத்தில் இன்னும் அதிகமாக வலுவடையும். சனிகிழமையான ஓய்வுநாள் சுத்தமாக நிராகரிக்கப்படும். ஆகவே கர்த்தர் கொடுத்த ஓய்வுநாள் சனிகிழமை, மனிதன் கொண்டு வந்த ஓய்வுநாள் ஞாயிறு.



நமக்கு எது வேண்டும்? ஆண்டவருடைய முத்திரையா ? அல்லது மிருகத்தின் முத்திரையா ? அவனவன் கையிலே முடிவு இருக்கிறது. இந்த ஞாயிற்று கிழமை ஆசரிப்பை சட்டத்தின் கீழ் கொண்டுவந்துவிடுவார்கள். அது சிவில் சட்டமாகவும், தேச சட்டமாகவும் கொண்டுவருவார்கள். அப்படி அதை ஆசரிக்காத வர்களுக்கு சிறைதண்டனை அல்லது பணம் கட்ட சொல்லு வார்கள். மரணதண்டனையும் கொண்டுவருவார்கள்.

**அவர்களுக்குப் பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவ னெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்குமுன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது.** -வெளி. 14: 9, 10, 11.

பயங்கரமான இந்த சாபவார்த்தைகளை ஆண்டவர் அந்த மிருகத்தின் முத்திரையை அடைகிறவர்களுக்கு வைக்கிறார். நாம் ஏமாந்து போகாமலும் போலிகளை பின்பற்றாமலும் ஜாக்கிரதையாக இருப்போம்.

**மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள்; அவர் நியாயத்தீர்ப்புக்கொடுக்கும் வேளை வந்தது; வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்களென்று கூறினான்.** -வெளி. 14: 7.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக இந்த உலகத்தில் வந்து அகோர பாடுகள்பட்டு சிலுவையில் மறித்து மீண்டும் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு போய் நமக்காக ஒவ்வொரு நாளும் தமது பிதாவிடம் பரிந்து பேசுகிறார். அவரது இரத்தம் சிந்தினது வீணாய்போகாமல் நாம் திரும்பவும் எழும்பி பிரகாசிக்கவேண்டும். இதை படிக்கிற ஒவ்வொரு தேவ பிள்ளைகளுக்கும் கர்த்தர் பெரும் ஆசீர்வாதத்தை கொடுப்பாராக ஆமென்.